# தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை
## TAMIL EDUCATION DEVELOPMENT COUNCIL

# அரையாண்டு – மதிப்பீட்டுத் தாள்
## 2021 – 2022
## தமிழ்மொழி
## வளர் தமிழ் 11

சுட்டெண்:..........................................................

நேரம்: 180 மணித்துளிகள்

மொத்தப்புள்ளிகள் : 100

**1) தேர்விடை வினா - சரியான விடைக்குரிய கூட்டில் புள்ளடி இடுக.**

1. சேரநாட்டிலே விண்ணுலகம் அடைந்த பெண்

அ) மாதரி ☐ ஆ) தேவந்தி ☐

இ) கண்ணகி ☐ ஈ ) மாதவி ☐

2. இலக்கண வகையில் எண்ணைக் குறிப்பது

அ) உயர்திணை, அஃறிணை ☐ ஆ) ஒருமை,பன்மை ☐

இ) அகத்திணை, புறத்திணை ☐ ஈ ) நல்வினை, தீவினை ☐

3. சிலப்பதிகாரக் கதையின் கருப்பொருளாக அமைந்தது

அ) தோடு ☐ ஆ) வளையல் ☐

இ) குண்டலம் ☐ ஈ ) சிலம்பு ☐

4. 'காரிருள் நின்ற கடைநாட் கங்குல்' இதில் கங்குல் என்பது

அ) மாலை ☐ ஆ) இரவு ☐

இ) பகல் ☐ ஈ ) எற்பாடு ☐

5. பல்லில்லாத முதியவர்க்கும் வீரத்தை ஊட்டும் கல்

அ) வைரக்கல் ☐ ஆ) சிற்பக்கல் ☐

இ) நடுகல் ☐ ஈ ) சாமிக்கல் ☐

6. குணப்பெயருக்கு ஓர் எடுத்துக்காட்டு

அ) வேர் ☐ ஆ) முக்கோணம் ☐

இ) படித்தல் ☐ ஈ ) சங்கு ☐

7. மலையும் மலை சார்ந்த இடமும் ________________ எனப்படும்.

அ) நெய்தல் ☐ ஆ) முல்லை ☐

இ) பாலை ☐ ஈ) குறிஞ்சி ☐

8. அளவுக்கு மிஞ்சினால் அமிழ்தமும் நஞ்சு. இப்பழமொழியின் கருத்து

அ) ஏமாற்றி அழிக்குஞ் செயல். ☐

ஆ) பயனற்ற தன்மை. ☐

இ) எதற்கும் எல்லையுண்டு. ☐

ஈ) போலித்தோற்றம் ☐

9. களநிலை என்பது

அ) இயல்புப்புணர்ச்சி ☐ ஆ) திரிதற்புணர்ச்சி ☐

இ) தோன்றற்புணர்ச்சி ☐ ஈ) கெடுதற்புணர்ச்சி ☐

10. மேசையில் நூல் இருந்தது. இதில் இடம்பெற்றுள்ள வேற்றுமை

அ) 5ஆம் வேற்றுமை ☐ ஆ) 7ஆம் வேற்றுமை ☐

இ) 3ஆம் வேற்றுமை ☐ ஈ) 6ஆம் வேற்றுமை ☐

11. யாழ்நூலகம் திறந்து வைக்கப்பட்ட ஆண்டு

அ) 1954 ☐ ஆ) 1959 ☐

இ) 1958 ☐ ஈ) 1981 ☐

12. எழுதினான் என்பதன் பிறவினை

அ) எழுதுவித்தான் ☐ ஆ) எழுதியவன் ☐

இ) எழுதப்பட்டது ☐ ஈ) எழுதுவான் ☐

13. நின்றான் என்ற வினைச்சொல்லின் இடைநிலை

அ) நின்ற ☐ ஆ) நின்று ☐

இ) ற் ☐ ஈ) நில் ☐

14. படர்க்கை ஒருமைக்கு ஓர் எடுத்துக்காட்டு

அ) ஓடியது ☐ ஆ) ஓடின ☐

இ) ஓடுகிறேன் ☐ ஈ) ஓடினாய் ☐

15. 'பச்சைக் குழந்தையங்கே
பாலுக்கு அழுதிருக்க....' என்ற பாடலைப் பாடியவர்

அ) உதயை வீரையன் ☐ ஆ) இரவி ☐

இ) சாலை இளந்திரையன் ☐ ஈ) அம்பி ☐

16. மந்தை மேய்ப்போர்

அ) கூத்தர் ☐ ஆ) பாணர் ☐

இ) இடையர் ☐ ஈ) விறலியர் ☐

17. கோவலன் பெண்ணாக உருவகித்துப் பாடியது

அ) கங்கையை ☐ ஆ) புகாரை ☐

இ) வைகையை ☐ ஈ) காவேரியை ☐

18. ஆ + இனம் என்பதைச் சேர்த்தால்

அ) ஆயினம் ☐ ஆ) ஆஇனம் ☐

இ) ஆவ்வினம் ☐ ஈ) ஆவினம் ☐

19. ண் என்ற மெய்யெழுத்தின் இனவெழுத்து

அ) ற் ☐ ஆ) ள் ☐

இ) ட் ☐ ஈ ) ல் ☐

20. காலமும் செயலும் வெளிப்படையாகத் தெரியும் வினை

அ) தெரிநிலைவினை ☐ ஆ) குறிப்புவினை ☐

இ) வினையடி ☐ ஈ ) பெயர்ச்சொல் ☐

21. இலங்கையில் கண்ணகிக்குக் கோவில் கட்டிய மன்னன்

அ) வச்சிரவாகு ☐ ஆ) செங்குட்டுவன் ☐

இ) கயவாகு ☐ ஈ ) குளக்கோட்டன் ☐

22. பின்வருவனவற்றுள் அடுக்குத்தொடர் அல்லாதது

அ) பாடிப்பாடி ☐ ஆ) ஆடிஆடி ☐

இ) சுடச்சுட ☐ ஈ ) நடுநடுங்கி ☐

23. சார்பெழுத்துகள்

அ) 18 ☐ ஆ) 217 ☐

இ) 100 ☐ ஈ ) 12 ☐

24. மாதவியின் நாட்டிய அரங்கேற்றம் நடந்த இடம்

அ) புகார் ☐ ஆ) வஞ்சி ☐

இ) காஞ்சி ☐ ஈ ) மதுரை ☐



TAMIL EDUCATION DEVELOPMENT COUNCIL தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை TEDC

25. கலக்கம் என்பதன் எதிர்ச்சொல்

அ) நிறைவு ☐ ஆ) விழிப்பு ☐
இ) தெளிவு ☐ ஈ) பிறப்பு ☐

26. ஓர் இனத்தின் அடையாளத்தைக் காட்டுவது

அ) கல்வி ☐ ஆ) மொழி ☐
இ) பணம் ☐ ஈ) செல்வம் ☐

27. நான்காம் வேற்றுமை உருபு

அ) ஆல் ☐ ஆ) அது ☐
இ) கண் ☐ ஈ) கு ☐

28. வினையாலணையும் பெயருக்கு எடுத்துக்காட்டு

அ) கொடுத்த ☐ ஆ) கொடுத்தவன் ☐
இ) கொடுத்து ☐ ஈ) கொடுத்தான் ☐

29. இருமுதுகுரவர் என்ற சொல் குறிப்பது

அ) ஆசிரியரை ☐ ஆ) பெற்றோரை ☐
இ) மாணவரை ☐ ஈ) உழவரை ☐

30. பறவைகள் காலையில் எழுந்து கலகலவென ஒலி எழுப்பின. இது

அ) தனிச்சொல்லியம் ☐ ஆ) கலப்புச்சொல்லியம் ☐
இ) கூட்டுச்சொல்லியம் ☐ ஈ) வினாச்சொல்லியம் ☐

புள்ளிகள் 30

2) பந்தியை வாசித்து; வினாக்களுக்கு முழுவிடை தருக.

பண்டைத்தமிழர் வீரம் நிறைந்த புறவாழ்வை மறம் என அழைத்தனர். புறவாழ்வு அன்பும் அறமும் பண்பும் உடையதாய் இருந்தது. அன்பே அவர்களது மறமாண்பைப் போற்றி வளர்த்தது. அன்பு தன் இனம், தன்மொழி, தன்நாடு, தன்தேசமென விரியும். தன் இனத்திற்காக தன் நாட்டிற்காக மறச்செயல் செய்தோரை மறவர் என்றனர். மறவர் தம் உயிரை ஒரு பொருட்டாக மதிப்பதில்லை. மறக்குடிப் பெண்கள் தம் குழந்தைகளை மானமுள்ள மறவராக வளர்ப்பதையே தம் கடமையாகக் கருதினர். இரண்டாயிரம் ஆண்டுகளுக்குப் பின்பும் எத்தனை மறக்குடிப் பெண்களை நம் தாயகம் தந்தது என்பதற்கு எமது வீரம் விளைந்த நிலமே சாட்சி. பாண்டியன் முதுகுடுமிப்பெருவழுதி பகைவர் நாட்டினுள் படையுடன் புகுந்ததும் முதலில் போர் நடைபெறப்போகும் இடத்திலுள்ள ஆவினங்கள், பெண்கள், நோயுற்றோர், யாவரும் பாதுகாப்பான இடத்துக்குச் செல்லுங்கள். நாங்கள், எமது அம்புகளை விரைவாகச் செலுத்துவோம் எனப் பறையறிவித்தான். ஆனால் 2009 இல் தன் நாட்டு மக்களையே பாதுகாப்பு வலயம் எனக்கூறி அங்கு போகவைத்து குண்டுமழை பொழிந்து இனப்படுகொலை செய்தது இலங்கை அரசு. நம் விடியலுக்காக நடந்த களவேள்வியிலே ஆயுதமேந்தியறியாத ஆண்களும் பெண்களும் பாலகரும் நோயுற்றோரும் கூட குண்டுகளால் சிதைக்கப்பட்டனர். வந்தாரை வாழ்வித்த வன்னி மண்ணுக்கு வானமே கூரையானது. இரண்டாம் உலகமகாயுத்தத்தின் பின் 1948 இல் இயற்றப்பட்ட மாந்த உரிமைச் சட்டத்திலுள்ள முதன்மை அடிப்படை உரிமையான நீர் அருந்தும் உரிமையும் அங்கு மறுக்கப்பட்டது.

1. யாரை மறவர் என்றனர்?

2. மறக்குடிப் பெண்கள் எவற்றைத் தம் கடமையாகக் கருதினார்?

3. மாந்த உரிமைச் சட்டத்திலுள்ள முதன்மை அடிப்படை உரிமை எது?

4. இலங்கையில் இனப்படுகொலை நடந்த ஆண்டு எது?

5. இந்தப் பந்தியிலிருந்து நீர் உணர்ந்து கொண்டது என்ன?

புள்ளிகள் 10

3) பாடநூல் வினா ஏழினுள் ஐந்திற்கு மட்டும் விடை தருக.

1. யாழ்நூலகத்திற்கான வரைபடம் யாரால் வடிவமைக்கப்பட்டது?

2. யாருடைய சூழ்ச்சியினால் கோவலன் கொல்லப்பட்டான்?

3. பட்டறிவின் பயன் என்ற கருத்தை விளக்கும் பழமொழியைத் தருக.


4. தமிழீழ மாணவர்களுக்கு மாறாத வலியையும் ஆறாத துயரையும் கொடுத்துக் கல்வியில் பாதிப்பை ஏற்படுத்திய நிகழ்வு எது?

5. 'அல்லவை செய்தாற்கு அறம்கூற்ற மாமென்னும்
பல்லவையோர் சொல்லும் பழுதன்றே...' என்ற பாடல் இடம்பெற்ற நூல் எது?

6. இறைவன் யாருடைய உள்ளங்களில் இருப்பதாகக் கவிஞர் இரவி கூறுகின்றார்?

அ

7. தரப்பட்டுள்ள ( ஈழம் ) வரைபடத்தில் குறிக்கப்பட்டுள்ள இடங்களின் பெயர்களை எழுதுக.




அ) ______________________

ஆ) ______________________

இ) ______________________

ஈ) ______________________

புள்ளிகள் 10

TAMIL EDUCATION DEVELOPMENT COUNCIL
TEDC

4. பத்து வரிகளுக்குக் குறையாமல் படத்தைப் பார்த்துக் கவிதை எழுதுக. அல்லது கீழுள்ள கவிதையைத் தொடர்ந்து எழுதுக.



தமிழனாய் வாழ்ந்து தலை நிமிர்வோம்
தமிழ்ப் பண்பாட்டுடனே நடை பயில்வோம்

________________________________________
________________________________________
________________________________________
________________________________________
________________________________________
________________________________________
________________________________________
________________________________________
________________________________________

புள்ளிகள் 10

**5) இலக்கண / மொழியியல் வினாக்கள் அனைத்திற்கும் விடை தருக.**

1. பின்வருவனவற்றிற்கு ஒவ்வோர் எடுத்துக்காட்டுத் தருக.

   1. பண்புத்தொகை ____________________

   2. உவமைத்தொகை ____________________

   3. உம்மைத்தொகை ____________________

2. பின்வரும் வினைச்சொற்களின் பெயரெச்சம், வினையெச்சம் என்பவற்றைத் தருக.

| | பெயரெச்சம் | வினையெச்சம் |
|---|---|---|
| நீந்தினான் | | |
| பாய்ந்தன | | |
| கேட்டாள் | | |

3. பின்வரும் மரபுச்சொற்களை வைத்து பொருள் விளங்குமாறு சொல்லியங்கள் எழுதுக.

   1. பதைபதைத்து

   ________________________________________

   2. சீருஞ்சிறப்பும்

   ________________________________________

4. காரணப்பெயர் என்றால் என்ன?

   ________________________________________

5. பின்வருவனவற்றைப் பிரித்து எழுதுக.

   புள்ளினம் ____________________

   மணியழகு ____________________

   கற்குகை ____________________

புள்ளிகள் 15

## 6) பந்தியை வாசித்து, மூன்றில் ஒரு பகுதியாகச் சுருக்கி எழுதுக.

நாம் அன்றாட வேலைகளைச் செய்திட நமக்கு ஆற்றல் தேவை. உணவின் மூலம் நம் உடலுக்கு ஆற்றல் கிடைக்கிறது. உணவு எமது உடல் வளர்ச்சிக்குப் பயன்படுகிறது. மேலும் வலிமையையும் நலத்தையும் தருகிறது. எனவே நாம் ஊட்டமுள்ள உணவுகளை உண்ண வேண்டும். குழந்தை முதல் முதியவர் வரை அவரவர் உடல்நலத்துக்கு ஏற்ப உணவுப் பழக்க வழக்கங்கள் வேறுபடுகின்றன. ஒருவரது உடலுக்கு ஏற்றதென அறிந்து உணவு செரித்தபின் அளவோடு உண்ண வேண்டும் என்பதை வள்ளுவரும் கூறியுள்ளார். பிறந்த குழந்தை முதல் பெரியவர்கள் வரை அனைவரும் எடுத்துக் கொள்ளும் ஊட்டமான உணவுகளான பால், பழங்கள், காய்கறிகள், கீரைவகைகள், மீன், முட்டை, இறைச்சி வகைகள் என்பனவற்றையும் சேர்த்துக்கொள்ள வேண்டும். துரித உணவுகள் உண்பதை நாம் தவிர்த்துக் கொள்ளல் வேண்டும். துரித உணவுகள் உடலுக்குத் தீங்கை விளைவிக்கும். நோய்கள் ஏற்படக் காரணமாக இருக்கும். நார்ச்சத்து மிகுந்த சுரைக்காய், பூசணி, கீரை போன்ற உணவுகளை உண்ண வேண்டும். இவை உடலில் சேரும் நச்சுக்களை அகற்றும் தன்மை உள்ளவை. எனவே நல்ல உணவுகளைத் தேர்ந்தெடுத்து உண்டு நலமாக வாழ வேண்டும்.

**சுருக்கத்திற்கான குறிப்புகள்:**

- தரப்பட்டுள்ள பந்தியை மீண்டும் மீண்டும் வாசித்து விளங்கிக் கொள்ளல்.
- அதன் உட்கருத்தை அறிதல்.
- உவமைகளையும் எடுத்துக்காட்டுகளையும் கூறியது கூறலையும் தவிர்த்தல்.
- எடுக்கப்பட்ட குறிப்புகளைத் தொகுத்து எழுதுதல்.

TAMIL EDUCATION DEVELOPMENT COUNCIL
தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை
TEDC

புள்ளிகள் 05

**7) தரப்பட்டுள்ள தலைப்புகளில் ஒன்றைத் தெரிவுசெய்து 200 சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை எழுதுக.**

- இக்காலக்கவிதைகள்
- புலம்பெயர் தேசத்தில் நாமும் எமது பண்பாடும்
- இன்றைய உலகின் பொருளாதாரமும் கொரோனா நோயும்

புள்ளிகள் 20

TAMIL EDUCATION DEVELOPMENT COUNCIL
தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை
TEDC

TAMIL EDUCATION DEVELOPMENT COUNCIL
தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை
TEDC